இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றி குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து, பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். *(மத் 2:9-11)*

# 2025

# புதிய ஆண்டு அமைதி மலரும் ஆண்டாக அமையட்டும்!

## திருத்தந்தையின் வாழ்த்துச் செய்தி (சுருக்கம்)

“எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்; உமது அமைதியை எங்களுக்கு அளித்தருளும்' என்ற தலைப்பில், பிறந்துள்ள 2025-ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதியன்று கொண்டாடப்பட்ட உலக அமைதி தினத்திற்காக வழங்கியுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை. நான்கு முக்கிய தலைப்புகளின் கீழ் அமைதி தினத்திற்கான தனது செய்தியை வழங்கியுள்ள திருத்தந்தை பல்வேறு காரியங்களைக் குறித்தும் அதிலும் குறிப்பாக நீதி, அமைதி குறித்தும் பல்வேறு சிந்தனைகளை வழங்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### 01. அழிந்து வரும் மனிதகுலத்தின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்தல்

எதிர்நோக்கின் உணர்வில் யூபிலி ஆண்டாக, நமது விண்ணகத் தந்தையால் நமக்களிக்கப்பட்ட இந்தப் புத்தாண்டின் விடியலில், ஒவ்வொருவருக்கும் தனது மனமார்ந்த அமைதிக்கான நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார். அதிலும் குறிப்பாக ஒதுக்கப்பட்டவர்களாகவும், கடந்த கால தவறுகளால் பாரம் சுமப்பவர்களாகவும், மற்றவர்களின் தீர்ப்பால் ஒடுக்கப்பட்ட வர்களாகவும், தங்கள் சொந்த வாழ்க்கையின் நம்பிக்கையின் ஒரு துளியைக் கூட உணர முடியாதவர்களாகவும் வாழ்பவர்களைத் தான் நினைத்துப் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### 02. ஒரு கலாச்சார மாற்றம்: நாம் அனைவரும் கடன்பட்டவர்

ஏழைகளின் துன்பத்திலிருந்து ஆதாயம் பெற்ற இயேசுவின் காலத்தில் இருந்த உயர் மட்ட மக்களைப் போலவே, இன்று, மக்கள் மத்தியில் அதே சூழல் நிலவுகிறது என்றும், இக்காலத்து அனைத்துலக அமைப்புகள் ஒன்றிப்பு மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் உணர்வால் ஈர்க்கப்பட்டால் ஒழிய, அநீதிகள், ஊழல் ஆகியவற்றால் குறிப்பாக ஏழை நாடுகளை சிக்க வைக்கும் நிலை குறித்து திருந்தந்தை எச்சரித் துள்ளார்.

இந்த யூபிலி ஆண்டின் உணர்வில், இந்த உலகின் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் நிலவும் சுற்றுச்சூழல் கடனை அங்கீகரித்து வெளிநாட்டுக் கடனை மன்னிக்க அனைத்துலகச் சமூகம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வ தாகவும், இது ஒன்றிப்புக்கான வேண்டுகோள், ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக நீதிக்கான வேண்டுகோள் என்றும் தெரிவித்துள்ளார்.

நாம் அனைவரும் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள் என்பதையும், நாம் அனைவரும்



அவருக்குக் கடன்பட்டிருக்கிறோம் என்பதையும், ஆனால் பகிரப்பட்ட மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பொறுப்பின் உணர்வில் நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக் கின்றோம் என்பதையும், விளக்கியுள்ளார் திருத்தந்தை.

### 03. நம்பிக்கையின் பயணம்: மூன்று முன்மொழிவுகள்

- முதலாவதாக, வளமான நாடுகள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ள நாடுகளின் கடன்களை மன்னிக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

- இரண்டாவதாக, கருவுற்றது முதல் இயற்கை மரணம் வரை மனித வாழ்வின் மாண்பிற்கு மதிப்பளிக்கும் உறுதியான அர்ப்பணிப்பை வழங்கிட வேண்டுமென தான் கேட்டுக்கொள்வதாகவும், இதன் வழியாக, ஒவ்வொரு நபரும் தனது சொந்த வாழ்க்கையைப் போற்ற முடியும், மேலும் அனைவரும் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்குமான வளமை மற்றும் மகிழ்ச்சியின் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

- மூன்றாவதாக, போர்களால் குறிக்கப் பட்ட இந்த நேரத்தில், ஆயுத வர்த்தகத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட விழுக் காட்டையாவது உலகளாவிய நிதியத்தை நிறுவி பசியை ஒழிப்போம் மற்றும் ஏழை நாடுகளில் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதையும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக் கொண்ட கல்வி நடவடிக்கைகளை எளிதாக் குவோம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

### 04. அமைதியின் இலக்கு

இறுதியாக, மேற்கண்ட இந்த முன்மொழி வுகளை எடுத்துக்கொண்டு எதிர்நோக்கின் பயணத்தை மேற்கொள்பவர்கள், பெரிதும் விரும்பும் அமைதியின் விடியலை நிச்சயமாகப் பார்ப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள திருத்தந்தை, 'பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்' (திபா 85:10) என்ற திருப்பாடலின் இறைவார்த்தைகளையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கடன் என்ற ஆயுதத்தைக் கைவிட்டு, ‘என் சகோதரர் சகோதரிகளில் ஒருவருக்கு எதிர்நோக்கின் பாதையை மீட்டெடுக்கும்போது, இந்தப் பூமியில் கடவுளின் நீதியை மீட்டெடுக்க நான் பங்களிக்கிறேன், அந்த நபருடன், நான் அமைதியின் இலக்கை நோக்கி முன்னேறுகிறேன்’ என்பதன் பொருளை சுட்டிக்காட்டினார். பிறந்துள்ள 2025-ஆம் ஆண்டு அமைதி மலரும் ஆண்டாக அமையட்டும்! என்று வாழ்த்தியுள்ள திருத்தந்தை, ஓர் உண்மையான மற்றும் நீடித்த அமைதி என்பது உடன்படிக்கைகள் மற்றும் மனித சமரசங்கள் பற்றிய விவரங்கள் பற்றிய கேள்விகளுக்கு அப்பால் செல்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

## 2025, யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்

### எதிர்நோக்கின் திருப்பயணிகள்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான
இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு
வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார்
வழியாக எங்கள் இதயங்களில் நீர்
பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச்
சுடரும், உமது அரசின் வருகைக்கான
எதிர்நோக்கை எங்களில் தட்டி
எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும்
வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம்
அருள் எம்மை மாற்றுவதாக!
தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம்
மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு
மானிட உள்ளங்கள் புதிய
விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய
காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள்
விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை
`எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய'
எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே
அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும்
அமைதியையும் அகிலமெங்கும்
அளிப்பதாக!

என்றென்றும் போற்றற்குரிய எம்
கடவுளாகிய உமக்கே மாட்சியும்
புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

# 2025 யூபிலி ஆண்டில், ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையைத் தருவோம்!

கடந்த டிசம்பர் 24, செவ்வாயன்று மாலை புனித பேதுரு பெருங்கோவிலில் புனிதக் கதவைத் திறந்து பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு நம்பிக்கையின் யூபிலி ஆண்டை தொடங்கிவைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த கிறிஸ்து பிறப்பு சிறப்புத் திருப்பலியில் மறையுரை வழங்கினார்.

அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே, ஏழைகளின் வியப்பு மற்றும் வான தூதர்களின் புகழ்ச்சிக்கு மத்தியில், இந்தப் பூமியின் மீது வானம் திறக்கிறது. அவரைப்போல நம்மை மாற்றுவதற்காக கடவுள் நம்மில் ஒருவராக மாறுகிறார். நம்மை உயர்த்தி மீண்டும் தந்தையின் அரவணைப்பிற்குள் கொண்டுவர அவர் நம்மிடையே இறங்கி வந்திருக்கிறார்.

இதுவே நமது நம்பிக்கை. கடவுள் இம்மானுவேல், அவர் நம்முடன் இருக்கிறார். எல்லையற்ற பெரியவராகிய கடவுள் நமக்காகத் தன்னை சிறியவராகிக்கொண்டார். உலகின் இருளுக்கு மத்தியில் தெய்வீக ஒளி ஒளிர்ந்தது. ஒரு குழந்தையின் பணிவில் விண்ணகத்தின் மகிமை பூமியில் தோன்றியது.

நம் இதயங்கள் மாட்டுத் தொழுவத்தை ஒத்திருக்கும் நிலையிலும் கூட கடவுள் நம்மில் எழுந்ததால், எதிர்நோக்கு சாகவில்லை, அது உயிருடன் இருக்கிறது, அது என்றென்றும் நம் வாழ்க்கையைச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்று நம்மால் கூற முடியும்.

### நம்மை புதுப்பித்துக்கொள்வோம்

புனிதக் கதவு திறக்கப்பட்டதன் வழியாக, நாம் புதியதொரு யூபிலி ஆண்டைத் தொடங்கியுள்ளோம். இதனால் இந்த அருள்தரும் புனித ஆண்டின் அறிவிப்பின் மறைபொருளுக்குள் நாம் ஒவ்வொருவரும் நுழைய முடியும் என்று நம்புகிறோம். எதிர்நோக்கின் கதவு உலகுக்குத் திறக்கப்பட்ட இரவு இது, உங்களுக்கும் எதிர்நோக்கு இருக்கிறது என்று கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் சொல்லும் இரவு இது.

இழந்த நம்பிக்கையை மீண்டும் கண்டு பிடிப்பதற்கும், அதை நமக்குள்ளேயே புதுப்பிப்பதற்கும், நமது காலங்கள் மற்றும் உலகத்தின் பாழடைந்த நிலையில் அதை விதைப்பதற்கும் இதுவே வழி. தாமதிக்காதீர்கள், வேகத்தை குறைக்காதீர்கள், ஆனால் நற்செய்தியால் ஈர்க்கப்பட உங்களை அனுமதியுங்கள். ஆகவே தாமதிக்காமல், நமக்காகப் பிறந்த கடவுளைக் காணச் செல்வோம்.

### கிறிஸ்தவ எதிர்நோக்கு என்பது...

கிறிஸ்தவ எதிர்நோக்கு என்பது செயலற்ற முறையில் காத்திருக்கும் ஒரு மகிழ்ச்சியான முடிவு அல்ல; நமக்கே உரிய பழக்கவழக்கங்களில் வாழ்ந்துகொண்டு சோம்பலில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று அது நம்மைக் கேட்டுக்கொள்கிறது.

புனித அகுஸ்தினார் கூறுவதுபோன்று நாம் செய்த தவற்றை ஒப்புக்கொண்டு அதனை மாற்றிக்கொள்ளும் மனவலிமையைப் பெறவேண்டும். ஆகவே, கிறிஸ்தவ நம்பிக்கை, உண்மையைத் தேடும் திருப்பயணிகளாகவும், ஒருபோதும் சோர்வடையாது கனவு காண்பவர்களாகவும், அமைதியும் நீதியும் ஆட்சி செய்யும் ஒரு புதிய உலகத்திற்கான கனவுடன் இருக்குமாறும் நம்மை அழைக்கிறது.

மேலும் கிறிஸ்தவ எதிர்நோக்கு என்பது, இயேசுவின் சீடர்களாகிய நாம், உலகத்தின் இருளில் ஒளியின் திருப்பயணிகளாக, நம்முடைய மிகப் பெரிய எதிர்நோக்கை அவரில் மீண்டும் கண்டுபிடித்து, தாமதமின்றி அதனை எடுத்துச் செல்ல நம்மை அழைக்கிறது.

### உலகை மாற்றி அமைப்போம்

நமது அன்னை பூமிக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி, அநியாயக் கடன்களால் ஏழைநாடுகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள், பழைய மற்றும் புதிய வகையான அடிமைத்தனத்தால் சிறை பிடிக்கப்பட்ட அனைவருக்கும் நம்பிக் கையை அளித்து இந்த உலகையே மாற்றியமைப்பதற்கு நம்மை அழைக்கிறது இந்த யூபிலி ஆண்டு.

நாம் ஒவ்வொருவரும் நற்செய்தியின், அன்பின், மற்றும் மன்னிப்பின் எதிர்நோக்கைப் பெறுவதற்கான அருமையானதொரு வழியை இந்த யூபிலி ஆண்டு நமக்குத் திறந்துள்ளது.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# மலாக்கா புனித பவுல் குன்றில் புனித பிரான்சிஸ் சவேரியார் திருவிழா கொண்டாடப்பட்டது

மலாக்கா: ஜாலான் பண்டா கபாவில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயம், கடந்த நவம்பர் 30 - டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் அதன் ஆண்டு விழாவைக் கொண்டாடியது. புனித பிரான்சிஸ் சவேரியார் மறைபரப்புக்கான புனிதரும், மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் பாதுகாவலரும் ஆவார்.

உண்மையான பண்டிகை நாளான டிசம்பர் 3 அன்று, இங்குள்ள புனித பவுல் குன்றில் காலை 9.00 மணிக்கு திருப்பலி கொண்டாடப்பட்டது. அருகாமையில் இருந்தும் தொலைவில் இருந்தும் 500க்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்கள் குன்றின் உச்சியில் கூடினர். அன்று 12 அருள்பணியாளர்களும் திருப்பலிக் கொண்டாட்டத்தில் கலந்து சிறப்பித்தனர் என்பது குஉறிப்பிடத்தக்கது.



புனித பவுல் குன்றில் கூடிய அருள்பணியாளர்களும் இறைமக்களும்

பங்குத் தந்தை மோசஸ் ராயப்பன் அவர்களின் தலைமையில் அருள்பணியாளர்கள் பெட்ரிக் தியோ (பத்து பகாட்) ஆரோன் ஆலமலே (மூவார்) மற்றும் ஆல்பெட் ஆரோக்கியசாமி (தம்பின்) ஆகியோர் திருப்பலியைக் கொண் டாடினர்.

திருப்பலியின் தொடக்கத்தில், 1500 களில் முதன்முதலில் இந்த நாட்டில் நற்செய்தியைக் கொண்டு வந்த புனித பிரான்சிஸ் சவேரியாருக்கு அருள்பணி மோசஸ் நன்றி தெரிவித்தார். நல்ல வானிலைக்கும் எதிர்பார்த்ததை விட அதிகமான கூட்டத்திற்காக அவர் கடவுளுக்கு நன்றி தெரிவித்தார்.

அவரது மறையுரையில், ஆங்கிலம் மற்றும் மலாய் ஆகிய இரு மொழிகளிலும், புனித பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொண்டார். 1506 இல் பிறந்த துறவி, லயோலாவின் புனித இன்னாசியாரை எப்படிச் சந்தித்தார் என்பதை அவர் பகிர்ந்து கொண்டதோடு, அவர்களிடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும், கடவுள் தனது பணியை நிறைவேற்ற அவர்களை கருவிகளாகப் பயன்படுத்தினார் என்றும், புனித பிரான்சிஸ் சவேரியாரின் செப வாழ்க்கை, மறைபரப்புப் பணிக்கான அவரது தளராத அர்ப்பணிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார். இந்தியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பயணங்களில் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் மொழிகளுக்கு ஏற்ப துறவியின் திறன், இன்றைய கிறிஸ்தவர்கள் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்வதற்கான புதிய, ஆக்கப் பூர்வமான அணுகுமுறை களை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றார்.

முன்னோக்கிப் பார்க்கையில், 2025 ஆம் ஆண்டு மலாக்காவிற்கு புனிதரின் வருகையின் 480 வது ஆண்டு நிறைவையும் திருஅவையின் 180 வது ஆண்டு நிறைவையும் குறிக்கும் என்று Fr மோசஸ் குறிப்பிட்டார். இயேசு கிறிஸ்துவின் செய்தியை படைப்பாற்றலுடனும் இரக்கத்துடனும் மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல ஊக்குவித்து, புனித யாத்திரை மற்றும் நம்பிக்கையின் உணர்வைத் தழுவுமாறு அவர் சபைக்கு அழைப்பு விடுத்தார்.

திருப்பலிக்குப் பின் புனிதரின் திருப் பண்டத்தை வணங்க அழைக்கப்பட்டனர்.

தமிழாக்கம் : ஆர்.கே.

# அவரது பிறப்பு நமதுள்ளத்தில் திருக்காட்சியாகட்டும்!

கிறிஸ்து பிறப்பு விழாவினைக் கொண்டாடிய ஒரு சில நாட்களுக்குப் பின் நாம் திருஅவையோடு இணைந்து திருக்காட்சி, மூன்று ஞானிகள் பெருவிழாவினைக் கொண்டாடுகிறோம். இந்த நாள் இயேசு தன்னையே உலகிற்கு ஒளியாக வெளிப்படுத்திய நினைவு நாள். ‘உலகின் மீட்பர்’ (யோவா 4:42) தான் உதித்த யூத குலத்திற்கும், நாட்டிற்கும் அப்பாற்பட்டு, ‘உலகனைத்திற்கும் உரியவன் நான்’ எனப் பறைசாற்றும் நாள்.

**முதல் வாசகத்தில்,** இஸ்ரயேல் மக்கள் பிற நாட்டவரால் அடிமைகளாக பல வழிகளில் நசுக்கப்பட்டனர். சொந்த நாட்டையும், வழிபட்டு வந்த கோவிலையும் இழந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஆண்டவர் பிற இனத்தவரும் உன் ஒளி நோக்கி வருவர், எருசலேமே எழுந்து ஒளிவீசு! என்று இறைவாக்கினர் எசாயா மூலம் நம்பிக்கை ஊட்டுவதை அறிகிறோம்.

**இரண்டாம் வாசகத்தல்,** புறவினத்தாரின் திருத்தூதர் என்று அழைக்கப்படும் புனித பவுலடியார் பிற இன மக்களும் கிறிஸ்து இயேசுவை அறிந்து புதிய உடன்படிக்கையின் பங்காளிகளாக மாறுகின்றனர் என்று அறிவுறுத்துகின்றார்.

புறவினத்தார்க்கு மூடியிருந்த மீட்பின் கதவுகள் அன்பிறைவன் கிறிஸ்து இயேசுவால் திறக்கப்பட்ட நாள் இந்நாள். நம் வாழ்வில் இவ்விழாவினை நம்பிக்கையின் அடிக்கல் நாட்டுவிழா எனச் சொல்லலாம். ஏனென்றால் இன்று இறைவன் தன்னையே நமக்குக் குழந்தை உருவில் வெளிப்படுத்துகின்றார்.

பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்டவர்கள், ‘இயேசு என்னும் ஒளியை தேடி’ பல நாடுகளில் இருந்தும் “உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர்” (எசா 60:3) என்று முன்மொழியப்பட்டதற்கு ஏற்ப மூன்று ஞானிகளும் இயேசுவைத் தேடி சென்றார்கள்.

மாந்தர் அனைவரும் இறைவனைத்தேடி வந்து அவரைக் கண்டுகொள்வார்கள் என்கிற கருத்தைத்தான் இன்றைய மூன்று வாசகங்களும் வலியுறுத்துகின்றன. கிறிஸ்து பிறந்தவுடன் வெட்டவெளியில் கடுங்குளிரில் நடுங்கிக்கொண்டு சாமக்காவல் புரிந்துக்கொண்டிருந்த இடையர்களுக்குத்தான் முதன் முதலாக வானதூதர் தோன்றி நற்செய்தியை அறிவித்தார். நற்செய்தியை கேட்ட இடையர்கள் தேடிச் சென்று சந்தித்தனர். விண்மீன் அடையாளத்தைக் கண்ட கீழ்த்திசை ஞானிகள் குழந்தை இயேசுவை தேடிச் சென்று பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப் போளமும் காணிக்கையாக செலுத்தி வணங்கி மகிழ்ந்தனர். இவ்வாறு விண்மீனின் அடையாளத்தை வைத்து தேடிச் சென்றதால் அவர்களின் தேடல் தனித்துவம் பெறுகிறது.

இன்றைய மத்தேயு நற்செய்தியில் அதிகாரம் 2-ல் காணப்படும் ஞானிகள் குறித்த சரியான எண்ணிக்கை விவிலியத்தில் குறிப்பிடவில்லை; அவர்கள் மூன்று வகையான காணிக்கைப் பொருள்களை வழங்கியதாக மட்டுமே அது குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் நாம் மூன்று ஞானிகள் வந்ததாக கருதுகிறோம்.

மனதில் செருக்கில்லாமல், ஆணவமில்லாமல் தாழ்ச்சியோடும் பணிவோடும் இயேசுவை தேடுகின்றபோது உன்னத ஒளியாம் இயேசுவை கண்டடைவோம். ஏரோது தவறான எண்ணத்தோடு தேடியதால் இயேசுவை கண்டுபிடிக்க முடியவில்லை. அவனின் தேடல் சுயநலம் மற்றும் ஆணவத்தின் உச்சமாக இருந்தது. எனவே, ஏமாற்றமே அவனுக்கு மிஞ்சியது.

இன்று இயேசுவைத்தேடி எங்கும் போக வேண்டியதில்லை. அவர் நம்காக நம் உள்ளத்தில் பிறந்துள்ளார். நமதுள்ளமே அவர் கண்டடைந்த குடில். இதில் எளிமை இன்றியமையாதது.

-ஆர்.கே.

**திருக்காட்சி பெருவிழா**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசா 60: 1-6 |
| திரு.பாடல் | 72:1-2.7-8.10-11.12-13 |
| 2-ம் வாசகம் | எபே 3: 2-3 |
| நற்செய்தி | மத் 2:1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை: திருக்காட்சிக்குரியது**